முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 309/2022

வா.சா.1– லட்சுமி

09–02–2024 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1) என்னுடைய பூர்வீக ஊர் என்ன என்றால் தாசநாயக்கன்பட்டி. அந்த ஊர் எந்த மாவட்டம் என்றால் தாராபுரம் தாலூக்கா திருப்பூர் மாவட்டம். அங்கிருந்து திருப்பூர் எப்போது வந்தீர்கள் 1996ம் ஆண்டு திருமணத்திற்கு பிறகு வந்தேன். யாரை திருமணம் செய்து வந்தீர்கள் என்றால் கிருஷ்ணமூர்த்தியை திருமணம் செய்து வந்தேன். அவரை திருமணத்திற்கு முன்பு எனக்கு எப்படி தெரியும் என்றால் அவர் எனக்கு தூரத்து சொந்தம்.

2) என் மகன் எந்த தேதியில் பிறந்தார் என்றால் தெரியாது. எனக்கு கிருஷ்ணமூர்த்தியை திருமணம் செய்வதற்கு முன்பே சுப்பிரமணியம் என்பவருடன் முதல் திருமணம் நடந்தது அதை மறைத்து தாவா தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் சொந்த ஊர் பழனி தாலூக்கா ஆடிநாயக்கன்வலசு என்றால் தவறு. என் அப்பாவின் ஊர் பெரிச்சிபாளையம்.

3) என் மகள் 2ம் வாதியின் பள்ளிச் சான்றிதழில் தகப்பனார் பெயர் கிருஷ்ணமூர்த்தி என குறிப்பிடப்படவில்லை. ஆரம்பப்பள்ளி சான்றிதழில் 2ம் வாதியின் தகப்பனார் பெயர் சுப்பிரமணியம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பொய். கிருஷ்ணமூர்த்தி இறந்த பிறகு வாதிகள் தான் வாரிசுகள் என்று எந்த கிராம நிர்வாக அலுவலரிடம் வாரிசு சான்று கேட்டு மனு கொடுத்தேன் என்றால் வேலம்பாளையம் கிராம நிர்வாக அலுவலரிடம் இருந்து பெற்றேன்.

4) கிருஷ்ணமூர்த்தி உயிருடன் இருந்தபோது அவர் கொங்கணகிரி பகுதியில் வசித்து வந்தார். அந்த பகுதி கிராம நிர்வாக அலுவலரிடம் வாரிசு சான்று கேட்டு மனு கொடுத்து வாரிசு சான்றிதழ் பெறவில்லை என்றால் சரியல்ல. அந்த பகுதி கிராம நிர்வாக அதிகாரி ஏற்கனவே 3ம் பிரதிவாதி மற்றும் அவர் மகன் கோகுல்நாத், மகள் கீதாஜோதி ஆகியோர் பெயரில்

வாரிசு சான்றிதழ் கொடுத்துவிட்டதால் என் பெயருக்கு வாரிசு சான்றிதழ் கிடைக்காது என்பதால் நான் தொட்டிபாளையம் கிராம நிர்வாக அதிகாரியிடம் வாரிசு சான்றிதழ் பெற்றேன் என்றால் சரியல்ல. இந்த குழப்பத்தின் காரணமாக 2 வாரிசு சான்றிதழ்களையும் நீக்கம் செய்து கோட்டாட்சியர் நீதிமன்றத்தை நாடுமாறு சொன்னார் என்றால் 3ம் பிரதிவாதி பெற்றது பொய் சான்றிதழ்.

5) நான் கிருஷ்ணமூர்த்தியின் வீட்டில் வாடகைக்கு வசித்து வந்தேன் என்றால் சரியல்ல. கிருஷ்ணமூர்த்தி மதுபானத்திற்கு அடிமைப்பட்டதை பயன்படுத்தி கிருஷ்ணமூர்த்திக்கும் 3ம் பிரதிவாதிக்கும் இடையே பிரச்சினை ஏற்படுத்தி 3ம் பிரதிவாதி வீட்டில் வசித்து வந்தேன் என்றால் சரியல்ல. கிருஷ்ணமூர்த்தியும் 3ம் பிரதிவாதியும் கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து இருந்ததால், கிருஷ்ண்முர்த்தியின் பெற்றோர் உயிருடன் இல்லாததால் இவற்றை எல்லாம் சாதகமாக பயன்படுத்தி, கிருஷ்ணமூர்த்தியின் வீட்டையும், அவர் இறப்பு பலன்களையும் அடைய பொய் வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6) இதே பரிகாரத்திற்காக நான் இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.168/2019 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கை நான் வாபஸ் பெற்று விட்டேன். ஏன் அந்த வழக்கை வாபஸ் பெற்றேன் என்றால் தெரிந்த நபர் வாரிசு சான்றிதழ் வாங்கிக் கொடுத்ததால் வழக்கை வாபஸ் பெற்றேன். தவறாக சாட்சியமளிக்கிறேன் தாவாவில் நான் கோரிய பரிகாரத்திற்காக ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் இல்லாததால் வழக்கை வாபஸ் பெற்றேன் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2024.02.09 18:03:44 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

திருப்பூர்.